பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
31 08 2026 MONDAY 7.15 AM
ஆகாஷ்வாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

- ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் மாநாடு கிர்கிஸ்தான் தலைநகர் பிஷ்கெக்கில் இன்று தொடங்குகிறது.
- மத்திய அரசு நிதி பற்றாக்குறையை குறைப்பதற்கான இலக்குகளை வெற்றிகரமாக எட்டியுள்ளதாக நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.
- உத்தராகண்ட் மாநிலம், ஹல்த்வானி நகரில் நடைபெற்ற மதச் சடங்கு மற்றும் தூய்மைப் பணி குறித்து அவதூறாகப் பேசியதாகக் காங்கிரஸ் மூத்த தலைவர் திரு. ராகுல் காந்தி மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.
- நேபாளத்தில் ஏற்பட்ட திடீர் வெள்ளப்பெருக்கில் பலியானவர்களின் எண்ணிக்கை 788 ஆக உயர்ந்துள்ளது.
- 20 வயதுக்கு உட்பட்டோருக்கான ஆசியக் கோப்பை கால்பந்து போட்டிக்கான, தகுதி சுற்று ஆட்டத்தில் இந்தியா இன்று சிரியாவை எதிர்கொள்கிறது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடி உஸ்பெகிஸ்தானில் அரசு முறை பயணத்தை முடித்துக்கொண்டு கிர்கிஸ்தான் சென்றடைந்துள்ளார்.

அங்கு இரண்டு நாட்கள் தங்கும் பிரதமர் அந்நாட்டு தலைநகர் பிஷ்கெக்கில் இன்றும் நாளையும் 26-வது ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு மாநாட்டில் கலந்துகொள்ளவுள்ளார்.

விமான நிலையத்தில் அவரை கிர்கிஸ்தான் அமைச்சரவையின் தலைவர் திரு. Kasymaliev Adylbek அலியோவிச் வரவேற்றார்.

பிரதமரை வரவேற்பு அளிக்கும் வகையில் பாரம்பரிய கிர்கிஸ் நடன நிகழ்ச்சியும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அதிபர் சாதீர் ஜபரோவின் அழைப்பை ஏற்று திரு. மோடி கிர்கிஸ்தானுக்கு சென்றுள்ள பிரதமர் ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் மாநாட்டின் இடையே இந்த அமைப்பில் இடம் பெற்றுள்ள நாடுகளின் தலைவர்களையும் சந்திப்பார்என்றுஎதிர்பார்க்கப்படுகிறது.

"பயங்கரவாதம், பிரிவினைவாதம் மற்றும் தீவிரவாதம்" ஆகியவற்றிலிருந்து விடுபட்ட ஒரு

பிராந்தியத்தை உருவாக்க ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் உறுப்பினர்களுடன் இணைந்து இந்தியா செயல்படும் என்றும் அவர் கூறினார்.

கிர்கிஸ்தானில் 6-வது உலக நாடோடி விளையாட்டுகளின் தொடக்க விழாவிலும் திரு. நரேந்திரமோடி கலந்துகொள்கிறார்.

<<<<>>>>

இந்த நிலையில் பிரதமரின் இந்த பயணம் குறித்து வெளியுறவுத்துறை வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்தப் பயணம் மத்திய ஆசியாவில் இந்தியாவின் ஒத்துழைப்பை வலுப்படுத்தும் என்றும், இப்பகுதியுடனான இந்தியாவின் தொடர்புகளை பலப்படுத்தும் என்றும் கூறியுள்ளது.

அமைதி, ஸ்திரத்தன்மை மற்றும் செழிப்பை நோக்கிய நமது கூட்டு முயற்சிகளை முன்னெடுத்துச் செல்லும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் 25 ஆண்டுகள்: நிலையான அமைதி, வளர்ச்சி மற்றும் செழிப்பை நோக்கி ஒன்றாக" என்பது இந்த மாநாட்டின் கருப்பொருளாகும்.

பயங்கரவாதத் தடுப்பு, பிராந்திய ஸ்திரத்தன்மை மற்றும் எல்லை தாண்டிய அச்சுறுத்தல்களை எதிர்கொள்வதில் ஒருங்கிணைந்த செயல்படுவது குறித்து இந்த மாநாட்டின் முக்கியமாக விவாதிக்கப்படவுள்ளது.

<<<<>>>>

மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் இன்றும் நாளையும் அமெரிக்காவின் Ashvelle-வில் நடைபெறும் ஜி20 நாடுகளின் நிதியமைச்சர்கள் மாநாட்டில் பங்கேற்கிறார்.

முன்னதாக, சிகாகோவில் உள்ள இந்தியத் துணைத் தூரக அலுவலகத்தில் அமெரிக்காவில் வசிக்கும் இந்திய வம்சாவளியினரிடையே திருமதி சீதாராமன் உரையாற்றினார்.

இந்த நிகழ்வில், நாட்டின் பொருளாதார இலக்குகளை எடுத்துரைத்த நிதியமைச்சர், அரசு கடன் வாங்குவது மற்றும் கடனின் அளவு குறித்த கேள்விகளுக்கு விளக்கம் அளித்தார்.

மத்திய அரசு நிதி பற்றாக்குறையை குறைப்பதற்கான இலக்குகளை வெற்றிகரமாக எட்டியுள்ளதாகவும் நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

வெளிநாட்டு வர்த்தகத் ஒப்பந்தங்களை குறிப்பிட்ட திருமதி நிர்மலா சீதாராமன், உலகளாவிய வர்த்தக ஒப்பந்தங்களின் செயல்பாடுகள் படிப்பாக செயல்படுத்தப்பட்டு வருவதாக கூறினார்.

ஐரோப்பிய ஒன்றியம், ஆஸ்திரேலியா, ஐக்கிய அரபு அமீரகம் போன்ற நாடுகளுடன் இந்தியா நேரடியாகவே வர்த்தக மற்றும் முதலீட்டு ஒப்பந்தங்களைச் செய்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

சிகாகோவில் நடைபெற்ற நிதியமைச்சரின் இருதரப்பு சுற்றுப்பயணத்தின் ஒரு பகுதியாக, விவசாயம், பாதுகாப்புத் தொழில்நுட்பம் மற்றும் விருந்தோம்பல் துறைகளைச் சேர்ந்த அமெரிக்க வர்த்தகத் நிறுவனங்களின் தலைவர்களுடன் நிதியமைச்சர் பேச்சு நடத்தினார்.

<<<<>>>>

நேபாளத்தில் ஏற்பட்ட திடீர் வெள்ளப்பெருக்கில் பலியானவர்களின் எண்ணிக்கை 788 ஆக அதிகரித்துள்ளது.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் இருந்து மேலும் பல உடல்கள் நேற்றும் மீட்கப்பட்டன.

பேரழிவைத் தொடர்ந்து 2,500-க்கும் மேற்பட்டோர் காணவில்லை. இயற்கை இடர் ஏற்பட்டு ஐந்தாவது நாளாக மீட்புப் படையினர் காணாமல் போனவர்களைத் தேடும் பணியிலும், சிக்கித் தவிப்பவர்களை மீட்கும் பணியிலும் தீவிரமாக ஈடுபட்டுள்ள நிலையில், பாதிக்கப்பட்ட எட்டு மாவட்டங்களில் இருந்தும் உடல்கள் மீட்கப்பட்டுள்ளன.

திரிசூலி நதியில் ஏற்பட்ட திடீர் வெள்ளப்பெருக்கு காரணமாக, மத்திய நேபாளத்தில் இருந்த தொங்கு பாலம் நேற்று அடித்துச் செல்லப்பட்டது.

சுமார் மூன்று மணி நேரம் நீடித்த இந்த வெள்ளப்பெருக்கு காரணமாக மக்கள் மீண்டும் அச்சமடைந்தனர்.

முன்னதாக கடந்த 26 ஆம் தேதி ஏற்பட்ட கடுமையான திடீர் வெள்ளப்பெருக்கு காரணமாக, காத்மாண்டிலிருந்து சற்று கீழ்நோக்கிச் செல்லும் தவாடிகாட் பகுதியில் ஒரு பாலம் அடித்துச் செல்லப்பட்டது.

அந்த பாலத்திற்கு மாற்றாக உள்ளூர் மக்கள் இந்த கியால்சௌக்-சராண்டி பாலத்தைப் பயன்படுத்தி வந்தனர்.

இதற்கிடையே புதன்கிழமை ஏற்பட்ட திடீர் வெள்ளப்பெருக்கு காரணமாக, திரிசூலி-3ஏ தளம் உட்பட நீர்மின் திட்டங்களின் சுரங்கப்பாதைகளுக்குள் சிக்கியுள்ள நூற்றுக்கணக்கான மக்களை மீட்கும் முயற்சிகளை நேபாளம் தீவிரப்படுத்தியுள்ளது.

இந்தியா மற்றும் சீனாவைச் சேர்ந்த வல்லுநர்கள் உள்ளிட்ட மீட்புக் குழுவினர் தொடர்பு கொள்ள முயன்று வருகின்றனர்,

ஆனால் இதுவரை சுரங்கப்பாதைக்குள்ளிருந்து எந்த பதிலும் கிடைக்கவில்லை.

காணாமல் போனதாகப் பதிவாகியுள்ள 2,500 பேரில் நூற்றுக்கணக்கானோர் நேபாளத்தின் நீர்மின் திட்டங்களின் ஊழியர்களாக இருக்கலாம் என்று கருதப்படுகின்றது.

<<<<>>>>

உத்தராகண்ட் மாநிலம், ஹல்த்வானி நகரில் நடைபெற்ற மதச் சடங்கு மற்றும் தூய்மைப் பணி குறித்து அவதூறாகப் பேசியதாகக் காங்கிரஸ் மூத்த தலைவர் திரு. ராகுல் காந்தி மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

கடந்த 9 ஆம் தேதி ஹல்த்வானி நகரில் ராம்லீலா மைதானத்தில் காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே பங்கேற்ற பொதுக்கூட்டத்திற்கு பிறகு அந்த மைதானத்தில் தூய்மைப் பணியும், 'சுத்திகரிப்பு யாகம்' ஒன்றும் நடத்தப்பட்டதாக ராகுல் காந்தி குற்றம்சாட்டியிருந்தார்.

ராகுல் காந்தியின் இந்தப் பேச்சுக்கு எதிராக ஹல்த்வானி காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டது. பொதுக்கூட்டம் முடிந்த பிறகு மைதானத்தில் கிடந்த குப்பைகளைத் தூய்மைப்படுத்தும் பணியில் பல்வேறு சமூகங்களைச் சேர்ந்த பொதுமக்கள் தாங்களாகவே முன்வந்து பங்கேற்றதாகவும் ஆனால் ராகுல் காந்தி இதை தவறாக சித்தரித்தவிட்டதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதையடுத்து ராகுல் காந்தி மீது இரு பிரிவினரிடையே மோதலைத் தூண்டுதல், மத உணர்வுகளைப் புண்படுத்துதல் மற்றும் வன்கொடுமைத் தடுப்புச் சட்டம் உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளின் கீழ் காவல்துறையினர் முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்துள்ளனர்.

<<<<>>>>

உத்தரப் பிரதேச மாநிலம், லால்பஞ்ச் காவல் நிலையத்தில் பணியாற்றி வந்த 28 வயது பெண் காவலர் கேசரி வர்மா உயிரிழந்த சம்பவம் தொடர்பாக, இரண்டு காவலர்கள் பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

உயிரிழந்த கேசரி வர்மா, கடந்த 22 ஆம்தேதி சாலை விபத்தில் தலையில் பலத்த காயமடைந்தார். மேல் சிகிச்சைக்காக விடுப்பு எடுக்க அவர் தாக்கல் செய்த விண்ணப்பத்தை காவலர்கள் மூத்த அதிகாரியிடம் பரிந்துரைக்கவில்லை என்று அவரது கணவரும் சக காவலருமான நாகேந்திர வர்மா குற்றம் சாட்டியுள்ளார்.

*விடுப்பு விண்ணப்பம் பரிந்துரைக்கப்படாததால், தனது மனைவியால் மேல் சிகிச்சைக்காக விடுப்பு எடுக்க முடியாமல் போனதாகவும், அதனால் அவர் உயிரிழந்ததாகவும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.*

*<<<<>>>>*

*புதுடெல்லியில் இன்று நடைபெறும் தேசிய ஆடை வடிவமைப்பு தொழில்நுட்பக் கழகத்தின் பட்டமளிப்பு விழாவில் குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு பங்கேற்று பேசுகிறார்.*

*நாடு முழுவதும் உள்ள 18 தேசிய ஆடை வடிவமைப்பு தொழில்நுட்பக் கல்லூரிகளில் படிப்புகளை முடித்த மாணவர்கள் இதில் கலந்துகொள்கிறார்கள்.*

*இந்த நிகழ்வில் மத்திய ஜவுளித்துறை அமைச்சர் திரு. கிரிராஜ் சிங்கும் கலந்துகொள்கிறார்.*

*<<<<>>>>*

*20 வயதுக்கு உட்பட்டோருக்கான ஆசியக் கோப்பை கால்பந்து போட்டியில், தகுதி சுற்று ஆட்டத்தில் இந்தியா இன்று சிரியாவை எதிர்கொள்கிறது.*

*இந்தப் போட்டி தாஷ்கண்டில் இன்று நடைபெற உள்ளது.*

*<<<<>>>>*

*ஆசிய கோப்பை மகளிர் டுவென்டி டுவென்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா 94 ரன் வித்தியாசத்தில் தாய்லாந்தை வென்றது.*

*துபாயில் நேற்று நடைபெற்ற இந்தப் போட்டியில், முதலில் விளையாடிய இந்தியா, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 9 விக்கெட் இழப்பிற்கு 159 ரன் எடுத்தது.*

*துவக்க ஆட்டக்காரர்களில் ஒருவர் ஆன ஷபாளி வர்மா 64 ரன்களே எடுத்தார்.*

*160 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் விளையாடிய தாய்லாந்து அணி 16 புள்ளி 1 ஓவரில் 65 ரன்னுக்கு ஆட்டம் இழந்தது.*

*<<<<>>>>*

*இலங்கை கிரிக்கெட் வாரிய நிர்வாகத்தில் அரசாங்கத்தின் தலையீடு காரணமாக, 2027 ஆம் ஆண்டு நடைபெறவிருக்கும் மகளிர் சாம்பியன்ஸ் கோப்பை கிரிக்கெட் தொடரை நடத்தும் உரிமையை சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் இலங்கையிடமிருந்து பறித்துள்ளது.*

*<<<<>>>>*

நாடு முழுவதும் பல்வேறு மாநிலங்களில் இன்று கனமழை முதல் மிக கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது. ஒடிசா மற்றும் சத்தீஸ்கர் மாநிலங்களின் சில பகுதிகளில் இன்று அதிதீவிர கனமழை பெய்ய வாய்ப்புள்ளது என்றும் அருணாச்சலப் பிரதேசம், பீகார், உத்தரப் பிரதேசம், ஜார்கண்ட், நாகாலாந்து, மணிப்பூர், மிசோரம், திரிபுரா மற்றும் உத்தராகண்ட் ஆகிய மாநிலங்களில் மிகக் கனமழை பெய்யக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அஸ்ஸாம், மேகாலயா, கிழக்கு மத்தியப் பிரதேசம், ஹிமாச்சலப் பிரதேசம், ஜம்மு மற்றும் காஷ்மீர், லடாக், மேற்கு வங்கம், சிக்கிம் மற்றும் மேற்கு உத்தரப் பிரதேசம் ஆகிய இடங்களிலும் மிதமான முதல் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

பீகார், ஜார்கண்ட், கர்நாடகா, கேரளம், மாஹே, லட்சத்தீவு, மேற்கு வங்கம், சிக்கிம் மற்றும் தெலங்கானா ஆகிய பகுதிகளில் இன்று இடி மற்றும் மின்னலுடன் கூடிய மழை பெய்யக்கூடும்.

இதே போன்ற வானிலை நிலை வடகிழக்கு இந்தியா, மத்தியப் பிரதேசம், மராத்வாடா, உத்தரப் பிரதேசம் மற்றும் உத்தராகண்ட் ஆகிய பகுதிகளிலும் நிலவக்கூடும் என்றும் வானிலை ஆய்வுமையம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

மத்தியப்பிரதேசத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை அம்மாநில முதலமைச்சர் டாக்டர் மோகன் யாதவ் நேற்று பார்வையிட்டார்.

Chitrakoot-ல் பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிட்ட அவர், அப்பகுதி மக்களுடன் உரையாடினார்.

இப்பகுதியில் இயல்புநிலை திரும்புவதற்கு தேவையான நடவடிக்கைகளை விரைந்து மேற்கொள்ளுமாறு அதிகாரிகளுக்கு முதலமைச்சர் அறிவுறுத்தினார்.

<<<<>>>>

மேற்குவங்கத்தில் தனியார் பங்களிப்புடன் ஊரக பகுதிகளுக்கான சுகாதார கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவது குறித்து பரிசலிக்கப்பட்டு வருவதாக அம்மாநில சுகாதாரத்துறை அமைச்சர் திரு *Sharadwat Mukherjee* கூறியுள்ளார்.

கொல்கத்தாவில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தனியார் மருத்துவக்கல்லூரிகளோடு இணைந்து ஆரம்ப சுகாதார நிலையங்களில் சுகாதார வசதிகளை மேம்படுத்துவது தொடர்பாக ஆலோசிக்கப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

<<<<>>>>